**25.02.2026.** O.S. No.88 of 2024

D.W.1 - **கண்ணன் த/பெ.ரகுநாதன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை தீனதயாளன் எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தீனதயாளனின் அப்பா பெயர் முனுசாமி என்றால் ஆமாம். என்னுடைய எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் முனுசாமியிடம் கடன் பெற்றதாகவும், அதற்காக அவரிடம் செக், புரோநோட்டு எல்லாம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் முனுசாமியிடம் கடன் வாங்கினேன், தேதி போட்டு காசோலை மற்றும் புரோநோட்டு கொடுத்தேன் பணத்தையும் திருப்பி கொடுத்துவிட்டேன்.

முனுசாமியிடம் எந்த தேதியில் எவ்வளவு பணம் வாங்கினேன் என்பதை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. முனுசாமியிடம் நான் கொடுத்த புரோநோட்டு பூர்த்தி செய்யப்பட்டதா அல்லது வெற்று புரோநோட்டா என்றால் வெற்று புரோநோட்டு ஆகும்.

அந்த புரோநோட்டை திருப்பி வாங்கினேனா என்றால் அவர் கொடுக்கவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் எந்த தேதியில் முனுசாமியிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வெற்று அந்த புரோநோட்டைத்தான் பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்கிறேனா என்றால் ஆமாம்.

நான் சொல்வது உண்மை அல்ல என்றும் வாதியிடம் தான் நான் கடன் வாங்கினேன் என்றும் அவர் பெயருக்குத்தான் தாவா புரோநோட்டு எழுதி கொடுத்தேன் என்றால் நான் அவரை பார்த்ததே இல்லை. தீனதயாளன் பெயருக்கு நான் ஒரு காசோலை கொடுத்ததாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பார்த்தேனா என்றால் சாட்சி காசோலையை வாங்கி பார்த்து அது என்னுடைய செக்தான் ஆனால் நான் அதை வாதியிடம் கொடுக்கவில்லை என்கிறார். அந்த காசோலை வங்கியில் தாக்கல் செய்யப்பட்டு என் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டு அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

தாவா கடனை திருப்பி கொடுப்பதற்காகத்தான் அந்த காசோலையை நான் அவருக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல நான் அவரிடம் பணமே வாங்கவில்லை. பிரதிவாதியிடம் நான் கடன் வாங்கியது உண்மை என்றும் வழக்கிற்காக நான் அவரின் அப்பாவிடம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் 9 வருடங்களுக்கு முன்பு ஒரு புரோக்கர் மூலமாக பணம் வாங்கினேன், தேதி போட்டுத்தான் புரோநோட்டும் செக்கும் கொடுத்தேன் எந்த தேதி என்று நினைவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்தவதற்கு முன்பு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் என்றால் தெரியவில்லை. வழக்கிற்காக நான் தெரியவில்லை என்று சொல்கிறேன் என்றும் அந்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை.

முனுசாமியிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன் என்றும் அதன் பிறகும் புரோநோட்டு மற்றும் காசோலையை திருப்பி கொடுக்கவில்லை என்று வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது புகாரோ கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. வாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்ற நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.02.25 17:48:27 +0530